மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 195/2007

பெயர் : கோபாலகிருஷ்ணன்
சாட்சி – பி.வா.சா–3 நாள்:07.08.2025

---

குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)

1. நான் இந்த வழக்கில் 6 ம் பிரதிவாதி தங்கராஜ் சாட்சியம் அளிக்க அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்கிறேன். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுக்கு நிலம் வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். தங்கராஜ் எனக்கு உறவு முறையா என்றால் இல்லை பழக்கமானவர்தான். அவரை எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் தெரியும்.

2. நான் விவசாயம் மற்றும் கோழிப்பண்ணை தொழில் செய்து வருகிறேன். 28.02.2007 தேதியில் வாதிகள் எழுதிக்கொடுத்தாக சொல்லும் விடுதலை பத்திரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சுப்பிரமணியம் என்னிடம் சொன்னார். சுப்பிரமணியம் எப்போது இறந்தார் என்றால் 2014 ம் ஆண்டு இறந்தார். எந்த சர்வே எண் சம்மந்தப்பட்ட எவ்வளவு விஸ்தீரண சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து சம்மந்தமான பத்திரங்கள் மற்றும் வருவாய் ஆவணங்களை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் மற்றம் கருணாகரன் ஆகியோர் 28.02.2007 தேதியில் எந்த விடுதலை பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் மற்றும் கருணாகரன் 28.02.2007 தேதியில் எந்த தொகையையும் சுப்பிரமணியத்திடம் இருந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. சுப்பிரமணியம் கொடுத்ததாக என்னிடம் சொன்னார்.

4. தாவா சொத்தில் 1ம் வாதி மாராத்தாளுக்கு 1/25 பங்கும், 2 மற்றும் 3 வாதிகளுக்கு தலா 6/25 பாகமும் பாத்தியம் என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளாமல்

பொதுவில் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகள் தான் தற்போது அனுபவித்து வருகிறார்கள். வாதிகள் தற்போது ஊரிலேயே இல்லை.

5. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் கூட்டாக 6/25 பாகமும், 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 6/25 பாகமும் பாத்தியம் என்றும், 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 6/25 பாகம் அவர் தற்போது இறந்து விட்டதால் அவரது வாரிசுகளான 1ம் வாதி மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியம் என்றால் சரியல்ல.

6. 28.02.2007 தேதியிட்ட விடுதலை பத்திரத்தை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் 4ம் பிரதிவாதி மோசடியாக கையெழுத்து பெற்று தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 5 முதல் 7 பிரதிவாதிகள் கேட்டுக்கொள்வதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் எற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.07 19:08:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.